தஞ்சாவூர் மாவட்டம் அரணமனை வளாக சரஸ்வதி மகால் நூலகத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மற்றும் சரஸ்வதி மகால் நூலக தலைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சிப் பணிகள் குறித்து நேற்று (01.06.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரஸ்வதி மகால் நூலக இயக்குநர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், வருவாய் கோட்டாட்சியர் திருமதி இலக்கியா, சரஸ்வதி மகால் நூலக நிர்வாக அலுவலர் எஸ். மார்ஸ் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகரம் வார்டு கழக இளைஞரணி நிர்வாகிகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தை திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசரிடம் நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், நகர இளைஞர் அணி அமைப்பாளர் அ.முகமது ராஷிக் ஹனீப் ஆகியோர் ஒப்படைத்தார்கள் அருகில் நகராட்சி துணைத் தலைவர் க.ஸ்ரீதர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர். செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமாமகேஸ்வரன், அக்னிராஜேஷ், டி.பிரியாகுமார், மாவட்ட பிரதிநிதி சௌந்தரராஜன், உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.

தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு : சேலம் மாவட்டத்தில் - பேரிடர் தொடர்பான

தகவல்களை 1077 என்ற எண்ணில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம்!

ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, ஜூன் 2-

மழை உள்ளிட்ட பேரிடர் தொடர்பான தகவல்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மற்றும் 04272452202ன்ற தொலைபேசி எண்ணிலோ பொது மக்கள் தெரிவிக்கலாம் என தென்மேற்கு பருவமழை தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

தென்மேற்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி முன்னிலையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (31.06.2025) அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குப்பின்னர் செய்தியாளர்களிடம் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

தென்மேற்கு பருவமழையானது ஜூன் மாதத்தில் தொடங்கவுள்ள நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, தேவையான முன்னேற்பாடு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து துறை அரக அலுவலர்களுடன் இன்றைய தினம் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. குறிப்பாக வருவாய் துறை மருத்துவத் துறை உள்ளாட்சி அமைப்புகள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறை மின்சாரத்துறை வேளாண்மைத் துறை நெடுஞ்சாலைத் துறை போக்குவரத்து துறை உள்ளிட்ட அனைத்து துறையினரும் இணைந்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது

சேலம் மாநகராட்சி பகுதி, ஆத்தூர் நரசிங்கபுரம்ட மேட்டூர் எடப்பாடி உள்ளிட்ட நகராட்சிகள் பேரூராட்சிகள். ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மழை நீர் அதிகம் தேங்கும் பகுதிகளில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள உறிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பாக சேலம் மாநகராட்சி பகுதிகளான சின்னேரி வயக்காடு சிவதாபுரம் பச்சப்பட்டி ராபன் நகர் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த நிகழ்வுகளைக் கொண்டு முன்னெச்சரிக்கை நடன்டிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் சேலத்தாம்பட்டி ஏரிப்பகுதியில் மாநகராட்சி அலுவலர்கள். நீர்வளத் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து ஆய்வு மேற்கொண்டு வெள்ளசேதம் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப் பட்டுள்ளது.

மாநகராட்சி பகுதிகளில் அதிகளவிலான மழைப் பொழிவினால் மழைநீர் தேங்கும் பட்சத்தில் மின் மோட்டார்களைக் கொண்டு நீரினை அப்புறப்படுத்திட உரிய முன்னேற்பாட்டுப்பணிகள் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோன்று திருமணி முத்தாற்றை தூர்வாவதற்கு அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மாநகராட்சியில் உள்ள பொதுமக்கள் பிளாஸ்டிக் பைகள் உள்ளிட்ட இதரப்பொருட்களை கழிவுநீர் கால்வாயில் வீசாமல் பாதுகாக்கும் வகையில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலோ, 0427 2452202 என்ற தொலைபேசி எண்ணிலோ மழைநீர் வெள்ளம் குறித்த தகவல்களை தெரிவிக்கணம். அதேபோன்று தாழ்வான பகுதியில் உள்ள பொதுமக்கள் மழைகாலங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவசர தேவை ஏற்படின் மேற்குறிப்பிட்டுள்ள எண்களுக்கு தொடர்பு கொண்டால் அவர்களுக்கு தேவையான தனிகள் டனடியாக மேற்கொள்ளப்படும். சுகாதாரத்துறையின் மூலம் காய்ச்சல் முகாம்கள் மற்றும் மருத்துவ முகாம்கள் தேவைகளுக்கு ஏற்ப மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மழைநீர் தேங்கும் பட்சத்தில் வருவாய்த்துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பள்ளிகள். கல்லூரிகள் மற்றும் திருமண மண்டபங்கள் உள்ளிட்டவற்றில் தங்குவதற்கு தேவையான முகாம்கள் ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முதன்மைக்கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு மழைநீர் பாதிப்பு ஏற்படாத வகையில் பள்ளி கட்டடங்களை ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் பள்ளி சிறார்கள் நீர் நிலைகளில் இறங்காமல் தடுக்கும் வகையில் மாநகராட்சி ஊரக வளர்ச்சித் துறை, நீர்வளத்துறை அலுவலர்களுக்கு எச்சரிக்கை பலகைகள் வைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையின்போது அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டுமென இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை அமைச்சர் இராஜேந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி மாவட்ட வருவாய் அலுவலர் இராரவிக்குமார், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் இளங்கோவன் உள்ளி ட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை

விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் எழுச்சியுறக் கொண்டாடுவோம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பொன்.கவுதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஜூன் 2-

விழுப்புரம் (தெற்கு) மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நவீன தமிழ்நாட்டின் சிற்பி, கழகத்தை அரை நூற்றாண்டு காலம் அரணாக இருந்து காத்திட்ட தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த நாளான நாளை (03-06-2025) விழுப்புரம் (தெற்கு) மாவட்ட கழகத்திற்கு உட்பட்ட அனைத்து ஒன்றிய - நகர - பேரூர் - கிளைக் கழகங்கள் சார்பில் அந்தந்த பகுதிகளில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து, நலத்திட்ட உதவிகள் வழங்கி தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்தும் வகையில் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

கழக கொள்கை ஏந்தி கலைஞர் புகழ் வளர்ப்போம்.

இவ்வாறு விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கேட்டுக்கொண்டுள்ளார்.

அண்ணாநகர் வடக்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்

வி.ஆர்.சதிஷ்குமார் தந்தை வி.ரவி மறைவு!

எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. அஞ்சலி செலுத்தினார்!

சென்னை, ஜூன். 02 -

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் வி.ஆர்.சதிஷ்குமார் மற்றும் வி.ஆர்.விஜயகுமார் ஆகியோரின் தந்தை முன்னாள் தமிழ்நாடு அனைத்து மாநகராட்சி பொது ஊழியர்கள் முன்னேற்றச் சங்க மாநில துணைத் தலைவர் வி.ரவி அவர்கள் (31.05.2025 - சனிக்கிழமை) அன்று மாலை 3.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் செலுத்தினார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, அண்ணாநகர் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம்,

மாநில தகவல் தொழிட்நுட்ப அணி மாநில துணை செயலாளர் கார்த்திக் மோகன்,

பெருநகர சென்னை மாநகராட்சி, 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ், 101 (அ) வது வட்டச் செயலாளர் சி.பி.திருமலை, 100 வது வட்டச் செயலாளர் ஆ.ஏகாம்பரம், 100 (அ) வது வட்டச் செயலாளர் கு.பாபு, 103 வது வட்டச் செயலாளர் பி.ஜெய்சங்கர், 103 (அ) வது வட்ட செயலாளர் அருள் கண்ணன், 106 (அ) இரா.நவீந்திரநாத்குமார், 107 (அ) வி.எம்.சிவா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (01.06.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணி அளவில், அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு அரும்பாக்கம் இடுகாட்டில் தகனம் செய்யப்பட்டது.

அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் அண்ணா நகர் வடக்குப் பகுதி மற்றும் தெற்கு பகுதி சார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், பகுதி நிர்வாகிகள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள் வட்டக் கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ, பி.எல்.சி நிர்வாகிகள், வட்டச் செயற்குழு உறுப்பினர்கள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள்,மூத்த முன்னோடிகள் கழக உடன் பிறப்புகள் ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இரா.பாலன் தலைமை! ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. - வ.பெ.சுரேஷ் முன்னிலை!

இராயபுரம் 48 வது வட்டத்தில் கழகக் கொடியேற்றி உணவு: ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. - ந.மனோகரன் - டாக்டர் அ.சுபேர்கான் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 2-

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்கு பகுதி, 48 வது வட்ட கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு முதல் நிகழ்ச்சியாக கழக கொடியேற்றி உணவு வழங்குதல் நாளை (03.06.2025) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி நமச்சிவாயன் தெரு, கன்னி கோயில் அருகிலும் இரண்டாவது நிகழ்ச்சியாக முதியோர்களுக்கு உணவு, உடை, உபகரணம் வழங்குதல் (06.06.2025 வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி மணியக்காரர் சத்திரம். ஸ்டான்லி மருத்துவமனை எதிரிலும் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு வட்ட செயலாளர் இரா.பாலன் தலைமை வகிக்கிறார்.

கு.ரமேஷ், இரா.பொன்முடி, எஸ்.யுவராஜ், ந.குமார், கோ.நித்தி யானந்தம், ந.மணிமாறன், என்.ஹயாத்பாஷா, எஸ்.தங்கவாசுகி, என்.சிவகுமார், பல்சர் பி.பாலாஜி, ரவிச்சந்திரன், கே.குணசேகரன், கு.எல்லன், ஏ.சிதம்பரம், எஸ்.ஜானகிராமன், ராஜி, குமார், கோபி, இ.துரை, இ.குணா, எல்.ராஜா, எம்.மோகன், கே.சிவா, ஆர்.விஜி, ஜி.சுரேஷ், டி.ரகுபதி, எஸ்.சதிஷ், எச்.ரிஸ்வான், எச்.தாவூத்பாஷா, இ.மாரி, எஸ்.சேகர், பி.வி.சரத், கே.மனோஜ்குமார், ச.கார்த்திகேயன், ஆர்.செல்வம், சி.மாதவன், பி.செல்வம், ஆர்.எஸ்.ராஜசேகர், எஸ்.லோகேஷ், கே.பாலாஜி, ஜி.விநாயகம், பி.ஆமோஷ், டி.ஏழுமலை, எம்.ஆர்.முருகன், பி.பிரவீன், எம்.பன்னீர் செல்வம், வி.ஹரிகிருஷ்ணன், ந.கோபி, சி.கார்த்திகேயன், கோ.இளையராஜா, வேலு ஜி.கணேசன், எம்.கந்தா, ஜி.சந்தானம், பி.அஜித் ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், மற்றும் வி.விஜய லஷ்மி விஜயகுமார், எஸ்.ரமேஷ், ரெயின்போ என்.விஜயகுமார், எம்.கே.இஸ்மாயில், எஸ்.திருஞானம், இ.மதன், வி.மலையம்மாள், எம்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர்பி.முருகன், பாலாலட்சுமணன், ஜெ.கௌரீ ஸ்வரன், என்.வேதா, சுவீஸ் ஆர்.இளையராஜா, வி.சுந்தரி, க.சாமுண்டீஸ்வரி, ந.சூர்யா, எம்.கவிதா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் கழகக் கொடியேற்றி இனிப்பு உணவு, முதியோர்களுக்கு உணவு, உடை, உபகரணம் ஆகியவற்றை சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்குகிறார்.

இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., தா.இளைய அருணா, ந.மனோகரன், டாக்டர் ஆ.சுபேர்கான், பி.டி.பாண்டிச்செல்வம், என்.மருதுகணேஷ், இரா.வெற்றிவீரன், மு.கோபி, க.நாகம்மை, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், கி.ராஜேந்திரன், நா.சண்முகம், வே.சிவக்குமார், கீதாசுரேஷ், பா.வேளாங்கண்ணி, ஆர்.விலட்சுமிவேலு,

எஸ்.ஜெயாஸ்ரீதர், பா.சுரேகா, கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, லயோலா மதன், பொன்இளவரசன், எம்.தீனதயாளன், லியோடி.சுரேஷ், கார்த்திக்செங்குட்டுவன், பி.செந்தில்குமார், வெ.சு.சத்தியநாராயணன், ஏ.டி.மணி, க.கோவிந்தசாமி, ஜெ.காணிக்கைநாதன், கே.என்.பார்த்திபன், மு.சாகுல்மீரான், த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், லோ.மோகன், பி.ஜெயலட்சுமி, ஜி.எஸ்.முருகன்,

நா.கஜேந்திரன், க.கலைச் ல்வன்; காட்டன் ஜி.சதீஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், எம்.பாலாஜி, ஆர்.டி.ஜெய்சங்கர், எஸ்.முகம்மது, மொய்தீன், ஏ.அன்வர், எம்.பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

பாபா ஜி.சீனிவாசன் சி.சின்னராஜ் பி.வி.சரத் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

ஒருங்கிணைந்த திருச்சி மாநகர முன்னாள் செயலாளர்

கே.கே.எம். தங்கராஜா மறைவு!

கழக நிர்வாகிகள் – தோழர்கள் அஞ்சலி!

திருச்சி, ஜூன் 2-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒருங்கிணைந்த திருச்சி நகர கழக செயலாளர், மாவட்ட ஆவின் சேர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் போன்ற பதவிகளை வகித்தவர் கே.கே.எம். தங்கராஜா. இவர் நேற்று (01.06.2025) பகர் திருச்சியில் காலமானார்.

திருச்சியில் தி.மு.க.வை வளர்த்த முக்கிய நிர்வாகிகளில் கே.கே.எம். தங்கராஜா முக்கியமானவர். கலைஞர் 1996 இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த போது இவருக்கு திருச்சி மாவட்ட ஆவின் சேர்மன் பதவி வழங்கப்பட்டது. இந்த பொறுப்பில் 1996 முதல் 2001 வரை செயல்பட்டார்.

இவ்வாறு பல்வேறு பொறுப்புகளில் சிறப்பாக செயல்பட்ட கே.கே.எம். தங்கராஜா நேற்று (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை பகல் காலமானார். அவரது உடலுக்கு கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், உறவினர்கள், நண்பர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வருகின்றனர்.

அவரது இறுதி ஊர்வலம் இன்று (ஜூன் 2) மாலை 3 மணி அளவில் திருச்சி, பெரிய மிளகு பாறையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகிறது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தி.வ.விஸ்வநாதன்
ஜூன் 2 (2023)

தனது இளமை பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

திருவொற்றியூர் பகுதியில் வட்டச் செயலாளர், நகரச் செயலாளர், நகர பொறுப்பாளர், மாவட்ட பொருளாளர், மாவட்ட துணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

திருவொற்றியூர் நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.